# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

**அரையாண்டுத்தேர்வு - கல்வியாண்டு 2005 - 2006**

**தமிழ்மொழி**

**வினாத்தாள் - பகுதி 1**

**ஆண்டு 8** **சுட்டெண்:..........................................** **நேரம்: 35நிமிடங்கள்**

**முப்பது வினாக்கள் இப்பகுதியில் இடம்பெறுகின்றன. எல்லா வினாக்களுக்கும் விடை அளிக்க வேண்டும். ஒவ்வொரு வினாவுக்கும் நான்கு விடைகள் தரப்படுகின்றன. மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்து, கூடு இடப்பட்ட விடைத்தாளில், விடைக்கான இலக்கத்தின் மீது புள்ளடி இடுக.**

1. தமிழ் எழுத்துக்களில் முதலெழுத்துக்கள்:

   (1) இருநூற்றி நாற்பத்தேழு (2) முப்பது (3) பதினெட்டு (4) பன்னிரண்டு

2. தமிழ் மொழிக்கு உள்ள தனிச் சிறப்பு:

   (1) முத்தமிழ்ப்பாகுபாடு (2) இயற்றமிழ் (3) இசைத்தமிழ் (4) நாடகத்தமிழ்

3. தமிழின் செம்மையைக் குறிக்கச் சொல்லப்படும் சொல்:

   (1) தீந்தமிழ் (2) தேன்தமிழ் (3) பைந்தமிழ் (4) செந்தமிழ்

4. தமிழின் மிகப் பழமையான இலக்கணநூல்:

   (1) நற்றிணை (2) குறிஞ்சிப்பாட்டு (3) தொல்காப்பியம் (4) திருக்குறள்

5. சிலப்பதிகாரத்தை இயற்றியவர்:

   (1) சீத்தலைச்சாத்தனார் (2) இளங்கோஅடிகள் (3) திருவள்ளுவர் (4) நாதகுத்தனார்

6. அறிஞர்கள் கூடி வாதிடும் இடத்தைக் குறிக்கும் சொல்:

   (1) பட்டிமன்றம் (2) மணிமண்டபம் (3) அரங்கேற்றம் (4) நீதிமன்றம்

7. நாளை எனது வீட்டுக்கு வாருங்கள். இதில் உள்ள தோன்றா எழுவாய்:

   (1) நீங்கள் (2) நீ (3) நான் (4) அவர்கள்

8. வன்னியில் ஒல்லாந்தரையும் , ஆங்கிலேயரையும் எதிர்த்து வீரப் போர் புரிந்தவன்:

   (1) காக்கைவன்னியன் (2) சங்கிலியன் (3) விக்கிரமராசசிங்கன்

   (4) பண்டாரவன்னியன்

9. பண்டாரவன்னியனுடன் தொடர்புடைய ஊர்:

   (1) பளை (2) பனங்காமம் (3) நல்லூர் (4) திருகோணமலை

10. தமிழரின் வீரத்தை விதந்து கூறும் பாடல்கள் கொண்ட தொகுப்புநூல்:

    (1) குண்டலகேசி (2) சிலப்பதிகாரம் (3) புறநானூறு (4) திருக்குறள்

11. நிகழ்ச்சி ஒன்றை மேடையேற்ற முன் நடத்திப் பார்ப்பதைக் குறிக்கும் சொல்:

(1) அரங்கேற்றம் (2) ஒத்திகை (3) முற்றுகை (4) கலைநிகழ்ச்சி

12. எழுபத்தைந்தாவது ஆண்டு நிறைவில் எடுக்கப்படும் விழா:

(1) பொன்விழா (2) வைரவிழா (3) வெள்ளிவிழா (4) பவளவிழா

13. நாளை புதிய வகுப்புகள் தொடங்கும் என்று பள்ளி முதல்வர் கூறினார். இவ் வாக்கியத்தின் வகை:,

(1) தனிவாக்கியம் (2) கலப்பு வாக்கியம் (3) தொடர்வாக்கியம் (4) கூட்டுவாக்கியம்

14. காட்டுமல்லிகை என்ற பாடலைப் பாடியவர்:

(1) பாரதியார் (2) ஔவையார் (3) திருவள்ளுவர் (4) உருத்திரமூர்த்தி

15. காட்டு மல்லிகையின் எழில் குறைவில்லை. எழில் என்பதன் ஒத்தசொல்:

(1) தோற்றம் (2) புதுமை (3) அழகு (4) காட்சி

16. ஓடினான் என்பது:

(1) வினைமுற்று (2) வினையெச்சம் (3) பெயரெச்சம் (4) பெயர்ச்சொல்

17. நாள் தோறும் பழங்கள் உண்பது உடலுக்கு நல்லது. இதில் காணப்படும் இடைச்சொல்:

(1) நாள் (2) உம் (3) தோறும் (4) ஓ

18. ஔவைக்கு நெல்லிக்கனி கொடுத்த மன்னன் பெயர்:

(1) செங்குட்டுவன் (2) பண்டாரவன்னியன் (3) அதியமான் (4) கயிலைவன்னியன்

19. அடவி என்பதன் ஒத்தசொல்:

(1) கடல் (2) வானம் (3) கனி (4) காடு

20. முப்பேரும் பெற்றது:

(1) கார் (2) மோர் (3) வானம் (4) நீர்

21. மோர் என்று பெயர் படைத்தது:

(1) கருமை (2) ஆச்சியர்கை (3) நிலத்தில் (4) கடல்

22. செல்லத்தில் திளைத்து செருக்கொடு மலரும் பூ,

(1) முல்லை (2) காட்டுமல்லிகை (3) தாமரை (4) சம்பங்கி

23. மயிலின் ஒலிக்குரிய பெயர்:

(1) அலறும் (2) கூவும் (3) அகவும் (4) கரையும்

24. பனையின் இளமைப் பெயர்:

(1) நாற்று (2) வடலி (3) குட்டி (4) கன்று

25. காத்தான் சத்திரத்தில் அன்னம் இலையில் படைக்க:

(1) ஊரடங்கும் (2) அத்தமிக்கும் (3) உதிக்கும் (4) வெள்ளியெழும்

26. வசைபாடும் பாடல்களைப் பாடுவதில் வல்லவர்:

(1) சின்னத்தம்பிப்புலவர் (2) சோமசுந்தரப்புலவர் (3) குமாரசுவாமிப்புலவர்

(4) காளமேகப்புலவர்

27. பௌத்த விகாரைகளைக் கட்டிய சைவமன்னன்:

(1) இராசராசசோழன் (2) இராசேந்திரன் (3) குலோத்துங்கன் (4) மகிந்தன்

28. இலங்கை முழுவதையும் கைப்பற்றியதோடு பாண்டிய முடியை மீட்ட அரசன்:

(1) இராசராசசோழன் (2) இராசேந்திரன் (3) அறிராசேந்திரன்

(4) வீரராசேந்திரன்

29. மெய்வல்லுநர் போட்டியில் இத்தாலி முதலிடம் பெற்றது:

(1) சினையாகுபெயர் (2) காலவாகுபெயர் (3) இடவாகுபெயர்

(4) பொருளாகுபெயர்

30. ஐந்தாம் வேற்றுமை உருபுகள்:

(1) ஆல் , ஆன் (2) இல், இன் (3) ஒடு , ஓடு (4) ஐ , கு

(புள்ளிகள் 30)

# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

## அரையாண்டுத்தேர்வு - கல்வியாண்டு 2005 - 2006

## தமிழ்மொழி

## விடைத்தாள் - பகுதி 1

**ஆண்டு 8** சுட்டெண்:........................................... **நேரம்: 30நிமிடங்கள்**

பலதேர்வு வினாக்களின் கீழே தரப்பட்டுள்ள நான்கு விடைகளிலிருந்து மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்து, இக் கூட்டுத்தாளில், அவ்விடைக்குரிய இலக்கத்தில் புள்ளடி (x) இடுக

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | 1 | 2 | 3 | 4 | 16. | 1 | 2 | 3 | 4 |
| 2. | 1 | 2 | 3 | 4 | 17. | 1 | 2 | 3 | 4 |
| 3. | 1 | 2 | 3 | 4 | 18. | 1 | 2 | 3 | 4 |
| 4. | 1 | 2 | 3 | 4 | 19. | 1 | 2 | 3 | 4 |
| 5. | 1 | 2 | 3 | 4 | 20. | 1 | 2 | 3 | 4 |
| 6. | 1 | 2 | 3 | 4 | 21. | 1 | 2 | 3 | 4 |
| 7. | 1 | 2 | 3 | 4 | 22. | 1 | 2 | 3 | 4 |
| 8. | 1 | 2 | 3 | 4 | 23. | 1 | 2 | 3 | 4 |
| 9. | 1 | 2 | 3 | 4 | 24. | 1 | 2 | 3 | 4 |
| 10. | 1 | 2 | 3 | 4 | 25. | 1 | 2 | 3 | 4 |
| 11. | 1 | 2 | 3 | 4 | 26. | 1 | 2 | 3 | 4 |
| 12. | 1 | 2 | 3 | 4 | 27. | 1 | 2 | 3 | 4 |
| 13. | 1 | 2 | 3 | 4 | 28. | 1 | 2 | 3 | 4 |
| 14. | 1 | 2 | 3 | 4 | 29. | 1 | 2 | 3 | 4 |
| 15. | 1 | 2 | 3 | 4 | 30. | 1 | 2 | 3 | 4 |

# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

**அரையாண்டுத்தேர்வு - கல்வியாண்டு 2005-2006**

**தமிழ்மொழி**

**வினாத்தாள்-பகுதி 2**

**ஆண்டு 8** சுட்டெண்:........................................... **நேரம்: 120நிமிடங்கள்**

**ஆறாம் வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

**1. கீழ்வரும் பாடநூல் வினாக்களுக்கு முழு விடை தருக.**

1. தமிழின் வளம் எவ்வாறு பெருக்கப்பட்டது?
2. காட்டுமல்லிகை எப்போது எங்கே மலர்ந்தது?
3. மன்னவனே! ஏன் அழைத்தாய் எனத் தெரியும். மாற்றானாம் தொண்டைமானிடம் என்னைத் தூதாக அனுப்பத்தானே? இது யாரால் யாருக்கு எப்போது கூறப்பட்டது?
4. குற்றமிக்க பாடல்களைப் பாடும் புலவர்களைக் கண்டால் காளமேகம் தான் என்ன செய்வார் எனக் கூறினார்?

(14 புள்ளிகள் )

**2. கீழ்வரும் பாடலைப் படித்து, அதன் கீழுள்ள வினாக்களுக்கு முழு விடை எழுதுக.**

அருமையாய்க் கிடைத்திட்ட இக்கனியுண்டால்
ஆயுள் நீளுமென்று அடவியில் துறவி சொன்னார்
அடியேனின் உயிர் அதிக நாள் இருந்தென்ன பயன்?
அவ்வையின் ஆயுள் வளர்ந்தால் தமிழ் வளரும்
தகடூரின் பெயர் உள்ளளவும் நான் வாழ்வேன்
தமிழ் உள்ளளவும் வாழ்க அவ்வையே என்றான்

1. ஆயுள் நீளுமென்று யார் கூறினார்?
2. அடியேனின் உயிர் அதிக நாள் இருந்தென்னபயன் எனக் கூறியவர் யார்?
3. ஔவையின் ஆயுள் வளர்ந்தால் எது வளரும்?
4. ஔவை எதுவரை வாழ்வாள்?
5. எதை உண்டால் ஆயுள் நீளும்?
6. எதுவரை நான் வாழ்வேன்?
7. ஒத்தசொல் தருக. (1) கனி (2) ஆயுள்

(14 புள்ளிகள் )

## 3. இலக்கண வினாக்களுக்கு விடை தருக.

1. மகன் தந்தைக்கு உதவி செய்வான். வினைச் சொல் குறிக்கும் காலத்தை எழுதுக.
2. படித்தாள் என்ற வினைமுற்றை வினையெச்சமாக மாற்றுக?
3. அழகிய சிறுமி நடனம் ஆடினாள். இதிலுள்ள அடைமொழியை எழுதுக.
4. அக்கா கணினியில் அழகாக வரைகின்றார். இவ்வாக்கியத்தில் தோன்றாது மறைந்து நிற்பது எது?
5. சேவல் காலையில் கூவியது. இது என்ன வாக்கியம்?
6. கவிஞரும் வந்தார். இதில் உள்ள இடைச்சொல் என்ன?
7. ஐந்தாம் வேற்றுமை உருபின் பொருள் ஒன்று தருக.
8. அவன் வெற்றிலை நட்டான். எவ்வகை ஆகுபெயர்?
9. எழிலனுக்குப் பிறந்தநாள் கொண்டாடினார். இதில் உள்ள உருபு யாது? எத்தனையாம் வேற்றுமை உருபு என எழுதுக.

(14 புள்ளிகள்)

## 4. கீழ்க் காணும் பகுதியைப் படித்து தரப்பட்டடிருக்கும் வினாக்களுக்கு முழு விடை எழுதுக.

உலகின்கண் சான்றோர்களால் தமிழ்மொழி போற்றப்படுகிறதென்றால் இதிலுள்ள இலக்கிய, இலக்கணச் செழுமை காரணமாகும். தமிழன்னையின் அணிகலன்களாக விளங்குவது இலக்கிய நூல்களாகும். சிலப்பதிகாரம் , மணிமேகலை, சீவகசிந்தாமணி , வளையாபதி, குண்டலகேசி ஆகிய ஐம்பெருங்காப்பியங்களும் செந்தமிழ் மொழிக்குச் சிறப்புச் சேர்த்துக் கொண்டிருக்கின்றன.

சிலப்பதிகாரம், குடிமக்கள் காப்பியமாகும். இதன் கதைமாந்தர்கள் கோவலன் , கண்ணகி , மாதவி ஆவார். சிலம்பு வழக்காடும் பொருளாகும். இது தமிழ் நாட்டுக் காப்பியமாகும்..

1. செம்மொழியின் சிறப்புக்குக் காரணம் என்ன?
2. தமிழன்னையின் அணிகலன்கள் யாது?
3. ஐம்பெருங்காப்பியங்கள் எவை ?
4. சிலப்பதிகாரத்தின் கதை மாந்தர்களின் பெயர்களைத் தருக.
5. சிலப்பதிகாரத்தில் வழக்காடும் பொருள் என்ன?
6. சிலப்பதிகாரம் எந்த நாட்டுக் காப்பியமாகும்?
7. தமிழ்மொழியைப் போற்றுபவர்கள் யார்?

(14 புள்ளிகள்)

**5.. (அ) கீழ்வரும் சொற்களை வைத்து வாக்கியங்கள் எழுதுக.**

(1) பண்பாடு (2) மலர்ச்சொண்டு (3) சனக்கூட்டம் (4) கடற்கோள்

(8 புள்ளிகள்)

**(ஆ) பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிவு செய்து ஐம்பது சொற்கள் கொண்டதாக எழுதுக.**

(1) சுனாமியால் தமிழீழ மக்களுக்கு ஏற்பட்ட இழப்புகளுக்கு உமது பாடசாலையும் நீரும் ஆற்றிய பணி பற்றி நண்பனுக்கு ஓர் கடிதம் எழுதுக.

(2) நீர் பார்த்து இரசித்த விழா

(6 புள்ளிகள்)

**6. கீழ்வரும் விடயங்களில் ஒன்றைத் தெரிவு செய்து, அதன் கீழுள்ள குறிப்புக்களின் அடிப்படையில் நூற்றைம்பது சொற்கள் கொண்ட கட்டுரை ஒன்று எழுதுக.**

1. பண்டாரவன்னியன்

பனங்காமம் ஆட்சிக்காலம் 1785-1811
தலைநகர் பனங்காமம்
பிறதமிழரசுகளுக்குப் படை உதவி
பெஸ்சூற்றர், பைல் கோட்டைகள் கைப்பற்றல்
வொன் றிபேக் தோற்றல்
மறைந்து வாழுதல்
காட்டிக்கொடுப்பு - கதிர்காமநாயகம்
வீரமரணம் , இலங்கையின் இறுதித் தமிழ் மன்னன்
அவன் வீரத்தைப் போற்றுவோம்

2. தமிழின் வளம்

தேன் தமிழ், தீந்தமிழ், பைந்தமிழ் / முத்தமிழ்
தமிழில் உருவம் பருவம் / தமிழர் உலக மக்கள் அனைவருக்கும் உறவினர்
முதற் சங்கம் இடைச்சங்கம் கடைச்சங்கம் கடற்கோள் அழிவு / தொல்காப்பியம் /
பத்துப்பாட்டு எட்டுத் தொகை நூல்கள் / இந் நூல்களால் வீரம் கொடை அறிதல்
/திருக்குறள் / ஐம் பெருங்காப்பியம் இறையன்பு இலக்கியங்கள் / 96 வகைச் சிற்றிலக்கியம்

3. செய்தித் தாள்காள்

வாசிப்பு மனிதனை பூரண மனிதனாக்குகின்றது / உலகின் நான்கு திசைகளிலும் நிகழும் நிகழ்வுகளை அறிய நாளிதழ்கள் உருவாயின / சகல நாடுகளிலும் சகல மொழிகளிலும் தினசரி, வாரம், மாதம் , காலாண்டு என வெளி வருகின்றது / அரசியல் சினிமா, விளயாட்டு / வியாபாரம் கல்வி வைத்தியம் மனையியல் உள்ளடக்கம் / கலை இலக்கியம் கதை / பேனாவால் சாதனை/ செய்தித்தாள் நடுநிலை ஊடகம்

(14 புள்ளிகள்)